# நல்ல தொற்காள் இறந்து பின் உயிரோடு எழுப்பப்பட்டாள்.

கீழ்வரும் குழந்தைகளுக்கான கல்வி செயல்பாடுகளில் தேவைப்பட்டதைத் தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, தேவையில் உள்ள மக்களுக்கு நடைமுறையில் தம் அன்பைப் காட்ட குழந்தைகளுக்கு உதவுவீராக!"



செயல்பாடு: பசியோடு இருப்பவனுக்கு உணவு வழங்கும் இந்தப் படத்துக்கு வர்ணம் தீட்டலாம். அப். 9:32-42 லிருந்து தொற்காளின் கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கவோ அல்லது மனப்பாடமாகக் கூறவோ செய்யலாம். கிறிஸ்தவர்கள் ஏழை மக்கள் மேல் எவ்வாறு அக்கறை எடுத்துக் கொண்டனர் என்பதை இது காட்டுகிறது.

கதையை கூறிய பின் கீழ்வரும் கேள்விகளைக் கேட்கலாம் (பதில்கள் கேள்விகளுக்குப் பின்னால்)

- தொற்காள் எப்படிப் பட்ட பெண்? (36)
- அவள் இறந்து போன உடன் விசுவாசிகள் என்ன செய்தனர்? (38)
- அறையில் அழுது கொண்டிருந்தது யார்? (39).
- ஏழை மக்கள் தொற்காளை குறித்து என்ன உணர்ந்தனர்? (39).
- தொற்காளை உயிர்ப்பிக்கு முன்பேதுரு மக்களிடம் என்ன செய்யக் கூறினார்? (40)
- இந்த அற்புதத்தின் விளைவு என்ன? (42)

ஏழைகளுக்கு உதவி செய்வது குறித்து ஒரு நாடகத்தைப் பயிற்சி செய்க.

- பிள்ளைகள், தேவையில் உள்ள மக்களிடம் எவ்வாறு நடைமுறையில் அன்பு செலுத்துவது பற்றி நடித்துக் காட்டலாம்.
- இந்தப் பாத்திரங்களை நடிக்குமாறு சில பிள்ளைகளை தேர்ந்து கொள்ளவும் (எல்லா பாத்திரங்களையும் நடிக்க வேண்டும் என்பதில்லை).

1. பசியில் இருக்கும் விதவை
2. தனிமையில் இருக்கும் அனாதை
3. வருத்தத்தில் இருக்கும் கைதி
4. களைப்புற்ற பயணிகள்
5. நோயாளியான அயலான்
6. காணமற்போன குழந்தை (வீட்டை கண்டு பிடிக்க முடியவில்லை)
7. இந்தத் தேவையில் இருக்கும் மக்களை சந்திக்கும் விசுவாசிகள்

- இந்த மக்கள் விசுவாசிகளிடம் தங்கள் பிரச்சினை என்ன என்பது பற்றி கூறவும். பின் குழந்தைகள் இத்தகைய மனிதர்களை சந்திக்கும் போது தாங்கள் என்ன செய்வார்கள் என்பதைக் கூறட்டும்.
- பிள்ளைகளால் நல்ல உதாரணங்களை யோசிக்க முடியவில்லை என்றால், கீழ்வரும் விஷயங்களை ஆலோசனையாகக் கூறலாம்.

1. விதவைக்கு உணவு அளித்தல்
2. அனாதைக்கு ஓர் இல்லம் தேடுதல்
3. சந்தித்து கைதியை ஊற்சாகப்படுத்துதல்

4. பயணிகளுக்கு உறங்க ஓர் இடம் தருதல்

5. நோயாளிக்காக ஜெபித்தல், அவர்களைப் பேணுதல்

6. காணாமற் போன குழந்தையை வீட்டுக்குக் கொண்டு விடுதல்.

அப். 9:32-42 லிருந்து தொற்காளின் கதையை நாடகமாக்குக.



சபைத்தலைவருடன் பேசி ஆராதனை வேளையில் சிறுவர்கள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்.

- காலம் குறைவாக இருந்தால் கதையின் முக்கியம் இல்லாத பகுதிகளை விட்டுவிடலாம்.
- போதுமான அளவுக்கு பிள்ளைகள் இல்லை என்றால் பெரியவர்களை உதவி செய்யும்படி கேட்கவும்.
- பேசி நடிக்க வேண்டியதை எல்லோரும் நன்கு அறியும் வரை தொடர்ந்து பயிற்சி செய்யவும்.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆயத்தம் செய்வதில் உதவவும்.
- பெரிய பிள்ளைகள் பேதுரு, கதை கூறுபவர், தொற்காள் ஆகிய வேடங்களை ஏற்கவும். தொற்காள் ஓர் ஊசி, நூல், துணி வைத்திருப்பதாக பாவித்துக் கொள்ளவும்.
- சிறிய பிள்ளைகள் சீஷர்கள் (யோப்பாவில் உள்ளவர்கள்) விதவைகள் ஆகியோரின் பாத்திரத்தை ஏற்கலாம்.

**கதை கூறுபவர்:** “அப். 9:32-42 லிருந்து தொற்காளின் கதையை வாசிக்கவும் அல்லது கூறவும். பின், தொற்காள் விதவைகளிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**தொற்காள்:** “இதோ பாருங்கள் சிநேகிதிகளே. இந்தத் துணியை உங்களுக்காகவே நான் தைத்தேன். உங்களுக்கு தேவை என்பது எனக்குத் தெரியும்.”

**விதவைகள்:** “நன்றி, தொற்காள்! ஏழைகளிடம் நீ எப்போதும் இரக்கம் உள்ளவனாகவே இருக்கிறாய்.”

**தொற்காள்:** தலையைப் பிடித்து கொண்டு படுக்கிறாள். “எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் படுக்கிறேன்.”

**சீஷர்கள்** : பேதுருவிடம் சென்று “பேதுருவே வாங்க. தொற்காள் இறந்து போய் விட்டாள்.”

**பேதுரு** : விதவைகள் தொற்காளை சுற்றி உட்கார்ந்து அழுது கொண்டு இருக்கின்றனர். எல்லோரையும் வெளியே போகும்படி கூறுகிறார். அவளை உயிரோடு எழுப்பும்படி தேவனை வேண்டுதல் பின், “தொற்காளே! எழுந்திரி!”

**தொற்காள்:** எழுந்து சுற்றிலும் பார்க்கிறாள்

**விதவைகளும் சீஷர்களும்:** தேவனை சேர்ந்து துதிக்கிறார்கள்.


**கதை கூறுபவர்:** உதவிய யாவருக்கும் நன்றி சொல்லவும்.

இந்த நாடகத்தை பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்

ஆடை ஒன்றின் படம் வரைந்து பிள்ளைகளைப் பார்த்து வரையச் செய்யுங்கள். ஆராதனை வேளையில் படத்தைக் காட்டி உதவி தேவைப்பட்டவர்களுக்கு தொற்காள் கொடுத்துதவியதை சித்தரிப்பதாக விளக்கவும்

வேறு எந்தெந்த வழிகளில் தேவையில் உள்ளோருக்கு உதவலாம் என்று கேட்கலாம். பிள்ளைகளும் பெரியவர்களும் இதற்கு உதாரணங்களைத் தரட்டும்.

இந்த நாடகத்தை பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்



ஆடை ஒன்றின் படம் வரைந்து பிள்ளைகளைப் பார்த்து வரையச் செய்யுங்கள். ஆராதனை வேளையில் படத்தைக் காட்டி உதவி தேவைப்பட்டவர்களுக்கு தொற்காள் கொடுத்துதவியதை சித்தரிப்பதாக விளக்கவும்

வேறு எந்தெந்த வழிகளில் தேவையில் உள்ளோருக்கு உதவலாம் என்று கேட்கலாம். பிள்ளைகளும் பெரியவர்களும் இதற்கு உதாரணங்களைத் தரட்டும்.

**கவிதை:** நீதி மொழிகள் 11:16, 24, 25, 28 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

மத். 25:40 ஐ **மனப்பாடம் செய்க.**

ஏழைகளுக்கு உதவுவது குறித்து பெரிய பிள்ளைகள் கவிதை, பாடல், நாடகம் எழுதட்டும்.

**ஜெபம்:** “கர்த்தாவே, அனாதைகள் விதவைகள் போன்ற தேவையில் உள்ளவர்களைப் பேண எங்களுக்கு உதவி செய்யும். நீர் நேசிப்பது போல் அவர்களை நாங்களும் நேசிக்க உதவும். தொற்காளைப் போல அவர்களுக்கு எப்படி உதவுவது என்று காட்டும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net